P.R.No:- 13 04.08.2017

# பத்திரிக்கைச் செய்தி

## திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடத்திற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டத்தில் காரிசாத்தான், சுந்தரேசபுரம், சாயமலை II, கிராம உதவியாளர் பணியிடங்கள் நியமனம் செய்திட அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான தகுதியுள்ள பதிவுதாரர்களின் பட்டியல் திருநெல்வேலி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கோரப்பட்டுள்ளது.

இதற்கான கல்வித் தகுதியாக 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அனைத்து வகுப்பினருக்கும் குறைந்தபட்சம் 21 வயது இருக்க வேண்டும். அட்டவணைபடுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அதிகபட்சம் 35 வயது வரையும், இதர வகுப்பினருக்கு 30 வயது வரை இருக்கலாம்.

திருவேங்கடம் வட்டத்தில் கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ள கிராமங்கள் மற்றும் அதற்கான இனசுழற்சி விபரங்கள்

| வ.எண் | கிராமத்தின் பெயர் | இனசுழற்சி முறை |
|---|---|---|
| 1 | காரிசாத்தான் | 40.Backward Classes (Backward Class Muslims) DW-NP |
| 2 | சுந்தரேசபுரம் | 41. General Turn – Non Priority |
| 3 | சாயமலை 1 | 42.Scheduled Castes – Non Priority |

**மேற்கண்ட இனசுழற்சியைச் சார்ந்த தகுதியுள்ள நபர்களும்,** அக்கிராமத்திற்குட்பட்ட குக்கிராமங்களைச் சார்ந்த நபர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ளவர்கள் தனித் தாளில் தனது சுய விபரங்களுடன் அதற்கான நகல்களுடன் நாளது தேதி வரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமை மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் அனைத்து தகுதியுள்ள நபர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் வருவாய் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருவேங்கடம் என்ற முகவரிக்கு 21.08.2017 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் நேரிலோ அல்லது

தபால் மூலமாகவோ வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்பு வரப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தேர்வு முறைகள் அனைத்தும் ஒளிவு மறைவின்றி மேற்கொள்ளப்படும் என்பதால் இடைத்தரகர்களிடம் யாரும் ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பணியிடத்திற்கான தகுதியான நபர்கள் வருவாய்த் துறை சட்டத்தின்படி நியமனக் குழுவினரால் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படுவதற்கு முன்னர் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு எவ்வித பயணப்படி தொகையும் வழங்கப்படமாட்டாது. நியமனத்தில் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் ரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் திருவேங்கடம் வட்டாட்சியருக்கு உண்டு. நியமனம் அனைத்தும் வருவாய்த் துறை அரசாணையின் அடிப்படையிலும் விதிமுறைகளுக்கு உட்பட்டும் மேற்கொள்ளப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் இடம் ஆகியவை குறித்து விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே தபால் மூலம் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அளிக்கும் சான்றுகள் கண்டிப்பாக உரிய அலுவலர்களிடம் மட்டுமே பெறப்பட்டு இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் வழங்கும் சான்றுகளில் போலியானது எனத் தெரியவந்தால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஏதுவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ப. ஒப்பம் 2/8/17

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு)
திருநெல்வேலி.

2/8/17

02/8/17

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்

திருநெல்வேலி